**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : CC.No.111/2021**

**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.நீல்ஜேம்ஸ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | எட்வின் ஜேம்ஸ் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தேனீ | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 03rd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தேனீ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2019ம் வருடம் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, 22.07.2019 அன்று இரவு 07.55 மணியளவில் மாவடிக்கால், தந்தை பெரியார் தெருவைச் சேர்ந்த கண்ணன் என்பவரது மனைவியான 32 வயது மதிக்கத்தக்க சரண்யா என்ற பெண் அவரது தாயாரால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது, அவர் சுயநினைவோடு இருந்தார். அவரிடம் விசாரித்தபோது, 22.07.2019 அன்று இரவு 07.30 மணியளவில் மாவடிக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டில் வைத்து தன்னை தனக்கு தெரிந்த ஒரு நபர் வெட்டு அரிவாள் வைத்து தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). வலது கையில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2) இடது புற முதுகில் 10 x 5 x 3 செமீ அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3). இரண்டு கைகளிலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

அவர் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து அவர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றுள்ளார்.

அவருக்கு நடைபெற்ற பரிசோதனைகளின் முடிவில் அவரது வலது கை சுண்டு விரலில் எலும்பு முறிவு காணப்பட்டது. வலது கை 4ம் விரலில் முட்டு விலகல் காணப்பட்டது. வலது கையின் 4வது மற்றும் 5வது விரல்களில் தசை நார்களில் காயம் காணப்பட்டது. இந்த முடிவுகளின் அடிப்படையில் அந்த நபருக்கு வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று வழங்கினேன். மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும்.

(2). 22.07.2019 அன்று இரவு 08.05 மணியளவில் மாவடிக்கால், தந்தை பெரியார் தெருவைச் சேர்ந்த மாரியப்பன் என்பவரது மனைவியான 39 வயது மதிக்கத்தக்க சுமதி என்ற பெண் அவரது தாயாரால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது, அவர் சுயநினைவோடு இருந்தார். அவரிடம் விசாரித்தபோது, 22.07.2019 அன்று இரவு 07.30 மணியளவில் மாவடிக்காலில் உள்ள அவரது தாயார் வீட்டில் வைத்து தன்னை தனக்கு தெரிந்த ஒரு நபர் வெட்டு அரிவாள் வைத்து தாக்கியதாக தெரிவித்தார்.

அவரை பரிசோதித்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). இடது கை மணிக்கட்டு பின்பகுதியில் 3 x 8 x 1.5 செமீ அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது. இடது கை மணிக்கட்டு பகுதியில் உணர்வுகள் இல்லை என்று தெரிவித்தார்.

அவர் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து அவர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றார்

அவருக்கு நடைபெற்ற பரிசோதனைகளின் முடிவில் அவரது இடது முன் கையின் பின்பக்கம் தசை நார்களில் காயங்கள் காணப்பட்டன. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆகும். நான் பார்த்த காயங்கள் காயம்பட்டவர்கள் சொன்ன விதத்தில் அரிவாளால் தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

Laceration Injury என்றால் அது வெட்டுக்காயம் ஆகும். போலீசார் என்னை விசாரித்தபோது, காயம்பட்ட 2 பேருக்கும் வெட்டுக்காயம் இருந்ததாக நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் ஆயுதத்தை காண்பித்து கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் வாகனத்தில் பின்னால் அமர்ந்து வேகமாக

செல்லும்போது, தடுமாறி கீழே கிடந்த கூர்மையான கற்களில் விழுந்தால் நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி தேனி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru.N. Venkateshwaran, Sheristhdar முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.04 18:39:53 +0530